மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 76/2022

பெயர் – சரவணக்குமார் (வா.சா.1)

நாள் – 15.11.2023

5ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

தபசில் சொத்தை பொறுத்து 5ம் பிரதிவாதி பவர் ஏஜெண்ட் என்றால் சரிதான். பவர் ஏஜெண்ட்டின் வேலை சொத்தை விற்றுக்கொடுப்பது ஆகும் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதிக்கு தபசில் சொத்தை பொறுத்து நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. பவர் ஏஜெண்ட் எழுதிக்கொடுத்த சொத்தில் ஏதேனும் வில்லங்கம் இருந்தால் அதனை சொத்தின் உரிமையாளர்தான் நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட பவர் பத்திரப்பதிவு அலுவலகத்தில் முறையாக பதிவு செய்யபட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. 5ம் பிரதிவாதி தபசில் சொத்தை மோசடியாக கிரையம் செய்து கொடுத்துள்ள நிலையில் அதுசம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் புகார் கொடுத்துள்ளேன். அந்த புகார் மனு பற்றி பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தபசில் சொத்தை பொறுத்து 5ம் பிரதிவாதிக்கு எந்த பங்கோ, உரிமையோ கிடையாது என்றால் பங்கு கிடையாது. ஆனால் பார்த்தீபன் பன்னீர்செல்வத்திற்கு பவர் கொடுத்திருந்தார். பவர் எழுதிக்கொடுத்ததால்தான் அவரை இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை பொறுத்து முடிவு எடுப்பதற்கு மாவட்ட பதிவாளருக்கு மட்டுமே உரிமை உள்ளது என்றால் சரிதான். மாவட்ட பதிவாளரை இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்க்காத காரணத்தினால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

6ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி. தொடர்ச்சி

எனது தாத்தா பெயர் என்ன வேலப்பநாயக்கர் ஆவார். வேலப்பநாயக்கரின் மனைவி பெயர் நாரணம்மாள் ஆகும். வேலப்பநாயக்கருக்கருக்கு, நாரணம்மாளுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 பெண்கள் மற்றும் 2 ஆண் மக்கள் அவார்கள். ஆக மொத்தம் ஐந்துபேர்கள் ஆவார்கள். வேலப்பநாயக்கருக்கு தாவா சொத்துக்களை தவிர வேறு சொத்துக்களும் உள்ளது என்றால் சரிதான். ஒன்று, இரண்டு சொத்துக்கள்

உள்ளது. வழக்கு தபசில் சொத்துக்கள் எனது தகப்பனாரா 1 ம்பிரதிவாதி ராமமூர்த்திக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் இல்லை. இன்னும் பாகப்பிரிவினை செய்யவில்லை. வேலப்பநாயக்கரின் வாரிசுகள் யார் யார் என்றால் குருவம்மாள், ராஜம்மாள், தனலட்சுமி, ராமமூர்த்தி, அய்யச்சாமி ஆவார்கள். நான் சொல்வது உண்மையாக இருந்தால் எனது தாத்தா வேலப்பநாயக்கரின் வாரிசுகள் இந்த வழக்கில் அவசிய கட்சியினர்கள் என்றாலும் அவர்களை இந்த வழக்கில் சேர்த்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. வேலப்பநாயக்கரின் வாரிசுகளை இந்த வழக்கில் சேர்க்காத காரணத்தினால் அவசிய கட்சியினரை சேர்க்காத தோஷத்திற்கு இந்த வழக்கு ஆட்பட்டுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பிராதில் உள்ள சங்கதிகளை வழக்கறிஞருக்கு யார் சொன்னார்கள் என்றால் நானும், எனது அம்மாவும் சொன்னோம். எனது அம்மாவும், எனது அப்பாவும் ஒன்றாகத்தான் இருந்தார்கள் தற்போது ஒன்றாக இல்லை. 2020 முதல் 2022 வரை எனது பெற்றோர்கள் ஒன்றாக இருந்தார்களா என்றால் இல்லை. 2007 காலகட்டத்தில் எனது தாயார் எங்கு இருந்தார் என்றால் எனது தகப்பனாருடன் சேர்ந்து குலசேகரபுரத்தில் வசித்து விவசாயம் செய்துவந்தார்கள். எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் தோராயமாக 20 வருடங்கள் இருக்கும். திருமணம் ஆனது முதல் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் திருமணம் ஆனபோது குலசேகரபுரத்தில் இருந்தேன். அதற்கு பிறகு ராஜபாளையம் சென்றுவிட்டேன். 2005 முதல் 2007 காலகட்டத்தில் எங்கு இருந்தேன் என்றால் குலசேகரபுரத்தில் இருந்தேன். 2005 காலகட்டத்தில் எனது தகப்பனார் விவசாயம் செய்தாரா என்றால் விவசாயம் செய்தார். 2016 ம் ஆண்டு வரை விவசாயம் பார்த்தார். தபசில் சொத்துக்களுக்கு பக்கத்திலும் எனக்கு இடம் உள்ளது என்றால் கொஞ்சம் தள்ளி 50 சென்ட் நிலம் உள்ளது. அந்த நிலத்திலும் எனது தகப்பனார் விவசாயம் பார்த்தார் என்றால் சரிதான். எனது தகப்பனார் 2005 முதல் 2016 வரையிலும் தபசில் சொத்துக்கு அருகில் உள்ள 50 சென்ட் நிலத்தில்தான் விவசாயம் செய்துவந்தார் என்றால் சரிதான். ஆனால் தபசில் சொத்திலும் விவசாயம் பார்த்தார். 28.11.2005 ம் தேதி எனது தகப்பனார் 4 ம் பிரதிவாதியிடம் இருந்து தக்க பிரதிபலன் பெற்றுக்கொண்டு கிரையம் அவருக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு படிப்பறிவு கிடையாது. காது முழுவதுமாக

கேட்காது. ஒரு பத்திரத்தை கொண்டுவந்து எனது தகப்பனாரிடம் ஏமாற்றி கையெழுத்து வாங்கிவிட்டார்கள். எனது தகப்பனார் கையொப்பம் செய்வாரா கைரேகை செய்வாரா என்றால் சற்று கோணலாக கையொப்பம் செய்வார். நாளது தேதிவரை வா.சா.ஆ.2 ஆவணமான கிரையப்த்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என தகப்பனார் நடவடிக்கை எடுத்துள்ளாரா என்றால் இல்லை. 4ம் பிரதிவாதி சார்பாக 5ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் செல்லாது என்பதற்காக எனது தகப்பனார் நடவடிக்கை எடுத்துள்ளாரா என்றால் இல்லை. எனது தகப்பனாருக்கு கிரையம் பெற்ற விவரம் தெரியும் என்பதால் தான் அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு எவ்வளவு காலமாக காது கேட்காது என்றால் தற்போதில் இருந்து 15, 16 வருடங்களாக காது கேட்காது. அதற்கு முன்பாக பாதி கேட்கும். எனது தகப்பனாருக்கு எழுத மற்றும் கையெழுத்துபோட தெரியும் என்றால் எழுத தெரியாது. கையெழுத்து கோணலாக போடுவார். தற்போது எனது தகப்பனாரை எங்கு வைத்து பராமரிக்கிறேன் என்றால் தற்போது குலசேகரபுரத்தில் வைத்து எனது பெரியப்பா ஒருவர் பராமரித்து வருகிறார். எனது தகப்பனாரை நான் பராமரிக்கிறேனா என்றால் இல்லை. எனக்கு திருமணம் ஆனதில் இருந்து அவரை பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. திருமணம் ஆன கொஞ்சம் நாள் எங்களுடன் தான் இருந்தார். எனது தாயார் எனது தகப்பனாரை பார்த்துக்கொண்டார். தற்போது 5 ஆண்டுகாலமாகத்தான் நான் ராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். எனது தகப்பனாரை நான் பராமரிக்காத காரணத்தினால் தான் அவரது வாழ்வாதாரத்திற்காக தக்க மறுபயன் பெற்றுக்கொண்டு 2005 ஆண்டிலேயே தபசில் சொத்தை கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் கிரையம் செய்து கொடுத்த விவரம் 2005 ஆண்டிலேயே தெரியும் என்றாலும் சரியல்ல. 2020ம் ஆண்டில்தான் தெரியவந்தது. தபசில் சொத்தில் நாங்கள் விவசாயம் செய்து வந்தோம். தற்போது 4 ஆண்டுகளாகத்தான் விவசாயம் பார்க்கவில்லை. 28.11.2005ம் தேதியிலேயே எனது தகப்பனார் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றாலும் அப்போதிலிருந்தே தபசில் சொத்தில் எனது தகப்பனார், நானோ விவசாயம் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. 4 ஆண்டுகளுக்கு முன்பு நான் விவசாயம் செய்தததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. சொத்தை பொறுத்து மோசடி செய்ததாக சொல்லியுள்ள நிலையில் எனது தகப்பனார் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தாரா என்றால் எனது அம்மா புகார் கொடுத்தார். எனது அம்மா காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் அந்த புகார் மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தகப்பனாரோ, தாயாரோ தாவா சொத்துக்கான கிரையம் மோசடியானது என்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வேறு சொத்தை விற்பனை செய்தாரா என்றால் விற்பனை செய்தார். ரூ.2000/−க்கு கிரையம் கொடுத்தார். அந்த நேரத்தில் தான் தபசில் சொத்தை பொறுத்த கிரைய பத்திரத்தில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். அந்த சொத்தை எனது தகப்பனார் யாருக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் ஞாபகம் இல்லை. எனது தகப்பனார் கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லப்படும் சொத்தும், எனது தாத்தா வேலப்பநாயக்கருக்கு பாத்தியப்பட்ட எனது தகப்பனாருக்கு கிடைத்த சொத்து என்றால் சரிதான். அந்த சொத்தை பார்த்தீபனுக்கு கிரையம் செய்து கொடுத்தாரா என்றால் ஞாபகம் இல்லை. எனது தகப்பனாருக்கு, வேலப்பநாயக்கருக்கு பாத்தியப்பட்ட மற்ற சொத்துக்களை விற்பனை செய்து கொடுக்க உரிமை உள்ளது போன்றுதான் தபசில் சொத்தையும் கிரையம் கொடுப்பதற்கு உரிமை உள்ளது என்றாலும் அதன் அடிப்படையில் 28.11.2005ம் தேதி எனது தகப்பனார் 4ம் பிரதிவாதிக்கு தக்க மறுபயன் பெற்று கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதிக்கும், 6ம் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட கிரைய பத்திரங்களை மோசடியாக ரத்து செய்யவேண்டும் என்பதற்காக நீதிமன்ற நடவடிக்கைகளை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது அனுபவத்திலேயே இல்லாத நிலையில் நீதிமன்றத்தில் செலுத்தியுள்ள செய்துள்ள நீதிமன்ற முத்திரை கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்கான அனுபவம் தற்போது 6ம் பிரதிவாதி வசம் தான் உள்ளது என்றால் சரிதான். தபசில் சொத்தை பொறுத்து எனக்கோ, 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கோ எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. UDRல் தவறாக ஏற்பட்டுள்ள பதிவுகளை வைத்து மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 7.2.2007ம் வருடத்திலேயே 6ம் பிரதிவாதி பெற்ற கிரையத்தை ரத்து செய்யவும், அந்த கிரையம் செல்லத்தகாது என விளம்புகை

செய்யுமாறு கோரி நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு காலவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் என் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் கோரியுள்ள பாகமும் தவறானது என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு முரண்தடை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. சுவாதீன ஒப்படைப்பு பரிகாரம் கோராமல் 6ம் பிரதிவாதி வசம் உள்ள தாவா சொத்தை பொறுத்து எவ்வித பாகப்பிரிவினையும் என்னால் கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் நான் கோரியுள்ள எந்த பரிகாரமும் கிடையாது என்றாலும் சரியல்ல. எனது தகப்பனாருக்கு காது கேட்காது சம்பந்தமாக வைத்தியம் எதுவும் பார்த்தோமா என்றால் இல்லை. எனது தகப்பனார் கையொப்பம் செய்து கொடுத்த கிரையத்தை பொறுத்து நான் பரிகாரம் எதுவும் கோரமுடியாது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் தாவா சொத்தை தவிர ஏற்கனவே விற்பனை செய்த மற்றொரு சொத்தை பொறுத்து எந்த விதபரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். அதற்காக பணம் பெற்றுக்கொண்டாம். தாவா வழக்கு சொத்தை பொறுத்தான கிரையத்திற்கு எனது தகப்பனார் சட்ட மறுபயன் பெற்றுள்ளதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.